**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**O.S. No. 130/2024**

**பிரதிவாதி தரப்பு சாட்சி** : **2**

பெயர் : **திரு. சிவசாமி**

தகப்பனார் / கணவர் பெயர் : **திரு. பொன்னுசாமி**

தொழில் :

கிராமம் :

தாலுகா :

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் நாள் வியாழக்கிழமை திரு.ந.குணசேகரன், எம்.பி.ஏ., பி.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, திருப்பூர் அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு இரண்டாவது சாட்சியின் முதல்நிலை விசாரணை.**

நான் சத்தியத்தின் பேரில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள விவரங்கள் சரிதான். எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் **பி.வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

என்னிடம் காட்டப்படும் 26.06.2017 தேதிய பி.வா.சா.ஆ.11 உயிலில் முதல் பக்கத்தின் கடைசியில், இரண்டாவது பக்கத்தின் கடைசியில், மூன்றாவது பக்கத்தில் சாட்சிகளுக்கு மேலேயும், நான்காவது பக்கத்தில் புகைப்படத்திற்கு அருகில் உள்ள கையொப்பம் பழனிசாமியின் கையொப்பம் ஆகும். பி.வா.சா.ஆ.11 ல் மூன்றாவது பக்கத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது ஆகும். அது **பி.வா.சா.ஆ.16** ஆகும். அதில் இரண்டாவது சாட்சி கையொப்பம் செய்துள்ளது பழனிசாமியின் மருமகனான முருகேசன் கையொப்பம் ஆகும். மேலும், இன்னார் என்று நிரூபித்தவராக காணப்படும் சாட்சிகளில் முதலாவது சாட்சி

கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **பி.வா.சாஆ.17** ஆகும். அதில் இரண்டாவது சாட்சி கையொப்பம் மேற்படி முருகேசனுடையது ஆகும்.

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

**(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.09.25 20:29:34 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.